Transfer of Non-teaching Staff.

* 152 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that permission has been sought for, to transfer members of non-teaching staff serving in High Schools within the diocese of Madurai and Ramanathapuram; and

(*b*) if so, the action taken thereon?

ஆசிரியர் அல்லாத பணியாளர் மாற்றம்

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் கிறித்தவ திருச்சபை நிர்வாகத்தின் (diocese) கீழ் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியரல்லாத பிற பணியாளர்களை, அப்பள்ளிகளுக்குள்ளேயே மாற்ற அனுமதி கேட்கப்பட்டுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) உதவிபெறும் பள்ளிகளின் மேலாண்மைகளால் தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்தல்) சட்டம் 1973-ஐ எதிர்த்து தொடுக்கப்பட்ட வழக்குகளின்மீது தீர்ப்பளிக்கையில், சென்னை உயர்நீதி மன்றம், மதுரை, ராமநாதபுரம் டயோசிசால் நடத்தப்படும் எல்லாப் பள்ளிகளும் சிறுபான்மை கல்வி நிலையங்களென அறிவித்து, மேற்படி சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் இப்பள்ளிகளுக்குப் பொருந்தாது என தீர்ப்பளித்துள்ளது. இத்தீர்ப்பின்படி மேற்படி டயோசிசால் நடத்தப்படும் பள்ளிகளின் உள் விவகாரங்களில் தலையிட அரசிற்கு உரிமையில்லை. ஆகையினால் மேற்படி டயோசிசின்கீழ் பணிபுரிபவர்களை ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக்கு மாற்ற அரசின் அனுமதி தற்போது அமுலில் உள்ள விதிகளின் படி தேவையில்லை.

(முற்பகல் 11-00)

திரு. பி. ஆர். தாமஸ்: பொதுவாக மாறுதல் என்பது பதவி உயர்வு வாய்ப்பு ஏற்படும்போது வழங்கப்படுகிறது. ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக்கு மாற்றும்போது, சேரும் காலம் "ஜாயினிங் டைம்" என்று சில நாட்கள் வழங்கப்படுகின்றன. இந்த நிறுவனங்களுக்கு அத்தகைய சலுகையை அரசு வழங்காத காரணத்தால், மாறுதல் பெற்றுச் சேருகிற

பணியாளர்களுக்கு அந்த நாட்கள் ஊதியம் கிடைக்காத அவல நிலை இருக்கிறது. ஜாயினிங் டைம் என்ற சலுகையை அரசாங்கம் அவர்களுக்கு வழங்க முன்வருமா? அந்தப் பணியாளர்கள் மாநில அளவில் அரசிற்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அதை அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதை நான் கவனத்தில் எடுத்துக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். கணபதி : நம்முடைய கான்ஸ்டிடியூஷனில் 30(1) ஆர்டிகிள் இருக்கிற வரையில், மைனாரிடிகளின் நிறுவனங்கள் எதைச் செய்தாலும் அரசாங்கம் அதைக் கண்டிக்க முடியாது என்ற நிலைமை உள்ளது. மைனாரிடி கம்யூனிடியைச் சேர்ந்தவர்களுக்கே அது பல சமயங்களில் பாதகமாக இருக்கிறது. மைனாரிடிகளே மைனாரிடிகளை அழிப்பதற்கான நிலைமைகள் உருவாகின்றன. ஆகையால் கான்ஸ்டிடியூஷனில் உள்ள அந்த ஆர்டிகிள் 30(1)ஐ மாற்றுவதற்கு அரசு மத்திய அரசிடம் கோரி முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அந்தத் தீர்ப்பின் பேரில் மேல் முறையீடு செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உறுப்பினர் கருத்தைப் பரிசீலனை செய்யலாம்.

திரு. பி. ஆர். தாமஸ் : இந்த ஆட்சி ஆரம்பித்த அந்த நாளன்றுதான் இந்த அனுமதி இந்த நிர்வாகத்திற்கு வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அனுமதி வழங்கப்படுவதற்கு முன்பாக பள்ளியோடு ஒப்பந்தம் செய்துள்ளவர்களுக்கு விதி விலக்கு அளிக்க அரசாங்கம் முன்வருமா? ஒப்பந்தம் என்பது இரு சாராரும் சேர்ந்து செய்யவேண்டுமென்று அமைவது. அந்த அடிப்படையில் ஒப்பந்தம் செய்த பணியாளர்களுக்கு விதி விலக்கு அளிக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவற்றையெல்லாம் பரிசீலித்து அரசினுடைய அதிகாரத்திற்கு உட்பட்ட தேவையான நடவடிக்கையை எடுக்கிறோம்.

திரு. எம். சங்கரலிங்கம் : அமைச்சர் சொன்ன பதிலிலிருந்து உயர்நீதி மன்றம் இதில் தலையிடுவதற்கு இல்லை என்று சொல்லியதாகத் தெரிகிறது. தனியார் பள்ளிகளில் குறிப்பாக மைனாரிடி பள்ளிகளில் செய்கிற தவறுகளைக் கண்டிக்கிற வகையில்தான் அரசாணை வழங்கப்பட்டிருக்கிறது. அது ஒழுங்கீனங்களைப் பாதுகாக்கும் நிலைமையில் இல்லை. மேல் முறையீட்டிற்கான

முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எவ்வளவு சிக்கிரம் எடுக்கப்படும்? இதற்கு மேல் உச்ச நீதி மன்றத்தில் அதற்கான அனுமதி பெற்றிருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : வழக்கறிஞர் மூலமாக அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேற்கொண்டு விவரங்களுக்குத் தனிக் கேள்வி போட்டால், வசதியாக இருக்கும்.

திரு. கே. எஸ். கணபதி : இந்த நிர்வாகங்கள் ஒரு ஆசிரியரை இன்னொரு இடத்திற்கு மாற்றுவதையே தண்டனையாகத்தான் செய்கிறார்கள். கொத்தடிமை என்று சொல்கிறார்களே, அதைப்போல இந்த நிர்வாகத்தை எதிர்த்துப் பேசுகிறவர்களுக்கு, தங்கள் உரிமையைக் கேட்பதற்குக் கூட இதுபோன்ற இடங்களில் உரிமையில்லை. மாற்றுகிறார்கள் என்றால் என்ன காரணத்திற்காக மாற்றுகிறார்கள் என்பதை அரசாங்கத்திற்குத் தெரிவித்து அனுமதி பெற்ற பிறகுதான், மாற்ற வேண்டுமென்ற திருத்தத்தை அரசு கொண்டுவருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சிறுபான்மையோர் நடத்துகிற இதுபோன்ற பள்ளிகளின் நிர்வாகத்தில் அரசு தலையிடுவதற்கில்லை என்று நீதி மன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. மேல் முறையீடு செய்து தீர்ப்புப் பெற வேண்டும். அல்லது அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். இரண்டில் ஒன்று ஏற்படுமானால், இதுபோன்ற குறைபாடுகள் நீங்குவதற்கு வசதியாக இருக்கும்.

TRUTH ALONE TRIUMPHS

Rest Houses for Teachers.

* 153 Q.—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the towns in which Rest Houses for teachers have been constructed under the " Rest Houses for Teachers Scheme ";

(b) whether there is any proposal with the Government to construct such Rest Houses in all the District Headquarters; and

(c) whether the Government have sanctioned any grant to the Districts in which such Rest Houses for the teachers have been constructed?